ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 308) Dec (1) / 2019

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ……………………………………………….……….5

3. தத்வ த்ரயம்…………………………………………………………………………9

4. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)...……....……………………………………..16

5. சது: ச்லோகீ (பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)…………………………..23

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 128)

32. ஸம்ஸ்காரை: ஸம்ஸ்க்ருத: சுப்ரைர் தேவ பித்ர அதிதி க்ரிய:
திவ்ய சாஸ்த்ராண்யதீயாநோ நிகமாம்ச்சைவ வைதிகாந்
33. அலோலுபேந சித்தேந ஸித்தாந்த அநநுஸஞ்சரந்
யாவதர்த்தம் து விஜ்ஞாநம் ஆததாநஸ்ததஸ்தத:

பொருள் – அவன் அனைத்து ஸம்ஸ்காரங்களும் நிறைந்தவனாகவும், தேவ – பித்ரு – அதிதி கர்மங்களைச் சரிவர இயற்றுபவனாகவும் இருத்தல் வேண்டும். அனைத்து வேத சாஸ்த்ரங்களையும் அறிந்தவனாகவும், வேதங்களுடைய எல்லையாகிய வேதாந்தங்களை அறிந்தவனாகவும் இருக்கவேண்டும். வேதங்களில் கூறப்பட்ட விதிகளை எந்தவிதமான பற்றுதலும் இன்றி சரிவர இயற்றுபவனாகவும், அனைத்தைக் குறித்தும் ஞானம் கொண்டவனாகவும் இருக்கவேண்டும்.

34. அதுாஷ்யம்ச்ச சாஸ்த்ராணி ப்ரமாணைரநுஸஞ்சரந்
ஆஹ்நிகம் விதிவத் குர்வந் சாஸ்த்ரார்த்தம் கர்மணாம் க்ரமை:
35. அஹராதி த்வஹோராத்ரம் புநா ராத்ரி அவஸாநகம்
அவந்த்யம் ஸததம் குர்வம்ச்ச உதிதை: கர்மணாம் க்ரமை:

பொருள் – சாஸ்த்ரங்களைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது (அல்லது துஷ்ப்ரயோகம் செய்யக்கூடாது). சரியான வழிகளில் அவற்றைக் குறித்த ஞானத்தை அடையவேண்டும். ஆஹ்நிக முறைப்படி, சாஸ்த்ர வழிகளில் அன்றாட கர்மங்களைச் சரிவர இயற்றவேண்டும். காலை, மதியம், இரவு என அனைத்து

வேளைகளிலும், அந்தந்த வேளைகளுக்கு ஏற்ப உள்ள கர்மங்களை எந்தவிதமான இடையூறும் இன்றி, சரிவர இயற்றவேண்டும்.

36. பஞ்சகாலரதோ நித்யம் பஞ்சயஜ்ஞபராயண:
பூஷிதோ தமதாநாப்யாம் ஸத்யேநாஹிம்ஸநேந ச
37. சோதிதேந க்ரமேணேமாம் வித்யாம் ஸம்ஸாத்ய யத்நத:
ப்ரஸந்நயா தியா யுக்தோ நித்யம் ஸ்வார்த்தபரார்த்தயோ:

பொருள் – ஐந்து வேளைகளில் செய்யவேண்டிய கர்மங்களை வழுவாமல் செய்யவேண்டும். ஐந்து யஜ்ஞங்களையும் ஒருபோதும் கைவிடக்கூடாது. புலன் அடக்கம், தானம், ஸத்யம், அஹிம்ஸை ஆகியவற்றைக் கொண்டவனாக இருக்கவேண்டும். சரியான வரிசையில் அனைத்து வித்யைகளையும் கைக்கொண்ட பின்னர், தனக்கும் மற்றவர்களுக்கும் எப்போதும் ஏற்புடையவனாக இருக்கவேண்டும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 308)

32. நிகமந அதிகாரம்

மூலம் –

கர பதரித விச்வ: கச்சித் ஆசார்ய த்ருஷ்டயா
முஷித நிகில மோஹோ மூலமந்த்ராதி போக:
ஸகுண விஷய ஸித்தௌ ஸம்ப்ரதாயம் ப்ரயச்சந்
ஸுசரித ஸிலஹாரீ ஸூரிப்ருந்த அபிநந்த்ய:

பொருள் – ஒரு அதிகாரி, தனது ஆசார்யனுடைய கடாக்ஷம் காரணமாக, அனைத்து விஷயங்களையும் உள்ளங்கை இலந்தைப்பழம் போன்று நன்றாக அறிகிறான். இதனால் தனது அனைத்துவிதமான அஜ்ஞானங்களும் நீங்கப் பெறுகிறான். மூலமந்த்ரம் முதலானவற்றுடைய ஆழ்பொருளை எப்போதும் எண்ணியபடி இருத்தல் என்னும் அனுபத்தை அடைகிறான். சிறந்த குணங்கள் கொண்ட வேறு ஒருவனைச் சந்தித்தால், தன்னுடைய ஸம்ப்ரதாயத்தைக் குறித்து உபதேசிக்கிறான். சான்றோர்களுடைய பழக்கங்கள் என்பதான தானியங்களைப் பொறுக்கி எடுக்கிறான். இதனால் நித்யஸூரிகளுடைய கூட்டத்தால் கொண்டாடப்படுகிறான்.

கடந்த அதிகாரங்களுடைய திரண்ட பொருள்

மூலம் – (1) இப்படி இஜ்ஜீவாத்மா ஸூரிகளோடு ஒக்க பகவதநுபவ ரஸத்துக்கு ஸ்வரூப யோக்யனாய் வைத்து அநாதிகாலம் இழந்து ஓரளவிலே புரிந்து ஸதாசார்ய ஸம்பந்தமுண்டாய்த் தத்வ ஹிதங்களை அறியத் தொடங்கினபடியும்; (2) இவற்றை அறிவிக்கும் ப்ரமாணங்களில் ரஹஸ்யத்ரயம் ஸாரதமமானபடியும்; (3) இவற்றைக் கொண்டு அறியும் அர்த்தங்களில் ஈச ஈசிதவ்யங்களினுடைய சரீர ஆத்மபாவ ஸம்பந்தாதிகள் ப்ரதாந ப்ரதிதந்த்ரமாய் ஜ்ஞாதவ்யங்களானபடியும்; (4) இஸ் ஸம்பந்தத்தோடே கூட ஜ்ஞாதவ்யமாக பூர்வாசார்ய ஸங்க்ருஹீதமான அர்த்தபஞ்சகம் ரஹஸ்யத்ரயத்தில் கிடக்கும்படியும்; (5) இவ் அர்த்தபஞ்சகத்துக்குள்ளே தத்வத்ரயாதி விபாக சிந்தை பண்ணுவார்க்குத் தாத்பர்யமும்; (6) இவ் அர்த்தபஞ்சகத்தில் ஈச்வரனாக ஸாத்விக சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டவன் ஸ்ரீய:பதியென்னுமிடமும்; (7) இத் தத்வ த்ரயங்களெல்லாம் தெளிந்தவன் முமுக்ஷுவாய் மோக்ஷ உபாய உந்முகனாம்படியும்; (8) அதிகாரி விபாகமும்; (9) இவ் அதிகாரிகளுக்கு அநுரூபமான உபாய விபாகமும்; (10) இவ்வுபாயங்களில் ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டனுக்கு அதிகார விசேஷம் இருக்கும் கட்டளையும்; (11) ஸக்ருத் கர்த்தவ்யமான இவ்வுபாயத்துக்கு அநுரூபமாக விஹிதமான பரிகர விபாகமும்; (12) முமுக்ஷுவுக்கு பரிகரமான பரந்யாஸ ரூப ப்ரதாந கர்த்தவ்யத்தினுடைய ஸந்நிவேசம் இருக்கும்படியும்; (13) இப்படி ஸாங்க ப்ரபதந அநுஷ்டானம் பண்ணினவன் ஸர்வரக்ஷண அதிக்ருதன் பக்கலிலே ந்யஸ்த பரனாகையாலே க்ருதக்ருத்யனாம்படியும்; (14) இந் நிஷ்டை தனக்குப் பிறந்தமை கண்டு தான் தேறியிருக்கைக்கு அடையாளங்களும்; (15) இவனுக்கு ஆர்த்தியில் மாந்த்யத்தாலே சரீரம் அநுவர்த்தித்ததாகில் இங்கிருந்த காலத்துக்கு ஸ்வயம்ப்ரயோஜநமாய் ஸ்வரூப ப்ராப்த சேஷ வ்ருத்தி ரூபமான கைங்கர்யம் இருக்கும்படியும்;

குறிப்பு – அடுத்த இரண்டு விளக்கங்களில், அடைப்புக்குறிக்குள் இருக்கின்ற எண்கள், அந்தந்த அதிகாரத்தைக் குறிப்பதாகும். அதாவது, அந்த அதிகாரங்களில் கூறப்பட்ட விஷயத்தின் இரத்தினச்சுருக்கமான கருத்தாகும்.

விளக்கம் – (1) இவ்விதமாக இந்த ஜீவாத்மா நித்யஸூரிகளைப் போன்றே பகவத் அனுபவத்தை எப்போதும் அனுபவிக்கும் தகுதி கொண்டவனாக உள்ளபோதிலும், எல்லையற்ற காலமாக அதனை இழந்து நிற்கிறான். பின்னர் தனது நிலையை உணர்ந்தவனாக, ஒரு நல்ல ஆசார்யனுடைய ஸம்பந்தத்தை அடைந்து, உண்மை மற்றும் நன்மை ஆகியவற்றை அறிந்து தெளிகிறான். (2) உண்மை மற்றும் நன்மை ஆகியவற்றைக் கூறவல்ல ப்ரமாணங்களின் ஸாரமாக மூன்று ரஹஸ்யங்களே உள்ளன. (3) இந்த மூன்று ரஹஸ்யங்கள் மூலமாக அறியப்படும் விஷயங்களில், "ஆள்பவன் – ஆளப்படும் வஸ்து" என்னும் உறவுமுறையை வெளிப்படுத்தும்விதமாக சேதந அசேதநங்கள் மற்றும் ஈச்வரன் ஆகியோருக்கு இடையே உள்ள "சரீரம் – ஆத்மா" என்பது முக்கியமாக அறியப்படவேண்டியதாக உள்ளது. (4) இத்தகைய ஸம்பந்தத்துடன் சேர்த்து, பூர்வாசார்யர்களால் கூறப்பட்ட அர்த்தபஞ்சகமும் அவசியமாக அறியப்படவேண்டிய விஷயமாகிறது. (5) இத்தகைய அர்த்தபஞ்சகத்தில், மூன்று தத்வங்களைத் தனியாகப் பிரித்து அதனைக் குறித்து ஆராய்ந்து அறிதல். (6) இந்த அர்த்தபஞ்சகத்தில், ஸாத்விக சாஸ்த்ரங்களால் ஈச்வரன் என்று கூறப்பட்டவன், "மஹாலக்ஷ்மியின் நாதன்" என்று அறிதல். (7) இந்த மூன்று தத்வங்கள் குறித்து அறிந்தவன், மோக்ஷத்தை விருப்புபவனாக, அதற்கான உபாயத்தைக் கைக்கொள்ள முயலுதல். (8) உபாயத்தைக் கைக்கொள்ளும் அதிகாரிகளுடைய வகைகள். (9) அந்த அதிகாரிகளுக்கு ஏற்றவிதமாக உபாயங்களில் உள்ள பிரிவுகள். (10) இந்த உபாயங்களில், ப்ரபத்தியைக் கைக்கொள்ளும் அதிகாரிக்கு உள்ள சிறப்பான அதிகாரங்கள். (11) ஒருமுறை மட்டுமே இயற்றவேண்டிய இந்த ப்ரபத்தி உபாயத்திற்கு ஏற்றவிதமாக விதிக்கப்பட்ட அங்கங்களுடைய பிரிவுகள். (12) மோக்ஷத்தை விரும்பும் அதிகாரிக்கு ஏற்றதான, அங்கங்களுடன் கைக்கொள்ள வேண்டிய பரந்யாஸ வடிவில் உள்ள அங்கியின் விளக்கம். (13) இவ்விதம் அனைத்து அங்கங்களுடனும் பரந்யாஸம் செய்த ஒருவன், தன்னைக் காப்பாற்றும் அனைத்து பொறுப்புகளையும் ஸர்வேச்வரனிடம் அளித்ததால், செய்யவேண்டியதைச் செய்துவிட்டான் என்னும் காரணத்தால், மேற்கொண்டு எதனையும் செய்ய வேண்டியதில்லை என்னுதல். (14) இத்தகைய நிஷ்டை தனக்கு உண்டானது குறித்து தான் சமாதானத்துடன் இருத்தலுக்கான அடையாளங்கள். (15) ஸம்ஸாரத்தில் உள்ள நிலையைப் பொறுக்க இயலாமல் விரைந்து இந்தச்

சரீரம் விழவேண்டும் என்னும் ப்ரார்த்தனைச் செய்யாதவரை தொடர்ந்தபடி உள்ள சரீர காலம் முடிய, தனது பயனாக, தனது ஆத்மஸ்வரூபத்தை அடையவைப்பதாக உள்ள கைங்கர்யம்.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த

தத்வ த்ரயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 4)

வ்யாக்யானம் - இவர் தாம், தத்வ த்ரயமென்று நிர்ணயிக்கைக்கு ப்ரமாணமெனெ? என்னில்; நிர்தோஷ ப்ரமாணமான வேதாந்தம், “போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா” என்று போக்த்ரு சப்தத்தாலும், போக்ய சப்தத்தாலும், ப்ரேரயித்ரு சப்தத்தாலும் சிதசிதீச்வர தத்வங்கள் மூன்றையுமிறே சொல்லுகிறது. ஆகையாலே, வேதாந்த ப்ரதிபாத்யம் தத்வத்ரயமுமே யென்று நிச்சயித்து, “மோக்ஷமுண்டாம்போது தத்வ த்ரய ஜ்ஞாநமுண்டாக வேணும்” என்கிறார்.

விளக்கம் - ஆனால் இங்கு இவர் தத்வங்கள் என்பது மூன்றுதான் என்று நிர்ணயம் செய்வதற்கான ப்ரமாணம் என்ன என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அளிப்போம். எந்தவிதமான தோஷங்களும் அற்றதான ப்ரமாணமாக வேதாந்தம் உள்ளது. இத்தகைய வேதாந்தத்தில், ச்வே. (1-12) - போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா - அனுபவிக்கும் சேதனன், அனுபவிக்கப்படும் வஸ்து, இதனை அனுபவிக்கும்படியாகச் செய்யும் ஸர்வேச்வரன் ஆகியவற்றை எண்ணியபடி - என்ற வாக்கியத்தில் “போக்த்ரு – அனுபவிப்பவன், போக்யம் – அனுபவிக்கப்படும் வஸ்து, ப்ரேரயித்ரு – அனுபவிக்கும்படிச் செய்பவன்” என்னும் சொற்கள் மூலம் சித், அசித் மற்றும் ஈச்வரன் ஆகிய மூன்றே கூறப்படுவதால் ஆகும். இதனால்தான் வேதாந்தம் மூலம் வெளிப்படுகின்ற தத்வங்கள் மூன்றே ஆகும் எனத் தீர்மானித்து, “மோக்ஷம் உண்டாகும் போது தத்வத்ரயம் குறித்த ஞானம் ஏற்படவேண்டும்”, என்கிறார்.

வ்யாக்யானம் - ஆனால், "தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி நாந்ய பந்த்தா அயநாய வித்யதே" என்று வேதாந்தங்கள் பகவத் தத்வ ஜ்ஞாநமொன்றுமே மோக்ஷ ஸாதநமென்னா நிற்க, தத்வாந்தர பரிஜ்ஞாநத்தையும் இவர் மோக்ஷ ஸாதநமாக அருளிச செய்வானென்? என்னில, பகவத் தத்வத்தை அறியும்போது ஸகல சேதநாசேதந விலக்ஷணமாகவும், இவற்றுக்குக் காரணமாகவும், வ்யாபகமாகவும், தாரகமாகவும், நியாமகமாகவும், சேஷியாகவும் அறியவேண்டுகையாலும், தத்வாந்தரங்களை யறியாதபோது இப்படி அறிய விரகில்லாமையாலும் "தத்வ த்ரய ஜ்ஞாநமுண்டாக வேணும்" என்னக் குறையில்லை. "போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா", "ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா ஜுஷ்டஸ் ததஸ் தேநாம்ருதத்வமேதி" என்கிற ச்ருதிக்கும் ஹ்ருதயம் இதுவிறே. இங்ஙனன்றாகில், "தமேவம் வித்வாந்" இத்யாதி ச்ருதியோடு இதற்கு விரோதம் வரும். ஆகையால், இந்த ச்ருதிச்சாயையாலே இவருமருளிச் செய்தாராகையாலே வேதாந்த விரோத ப்ரஸங்கமேயில்லை.

விளக்கம் – ஆனால், தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி நாந்ய பந்த்தா அயநாய வித்யதே – ஸர்வேச்வரனை அறிந்து கொண்டவன் இந்த உலகிலேயே முக்தன் ஆகிறான், மோக்ஷத்திற்கு வேறு பாதை இல்லை - என்ற வாக்கியம் மூலமாக, வேதாந்தங்கள் கூறுவது, "பகவத் தத்வ ஞானம் ஒன்றே மோக்ஷத்திற்கான ஸாதனம்" என்று கூறும்போது, மற்ற தத்வங்கள் குறித்த ஞனத்தையும் மோக்ஷ ஸாதநமாக இவர் ஏன் கூறுகிறார்? இதற்கு விடை அளிப்போம். பகவத் தத்வத்தை அறியும்போது, "அனைத்து சேதநம் மற்றும் அசேதனம் ஆகியவற்றைக் காட்டிலும் வேறுபட்டதாகவும், அவற்றுக்குக் காரணமாகவும், அவற்றுள் நிறைந்துள்ளதாகவும், அவற்றைத் தாங்குவதாகவும், அவற்றை நியமிப்பதாகவும், அவற்றின் எஜமானனாகவும் பகவத் தத்வமே உள்ளது" என்று அறியவேண்டும்; மற்ற தத்வங்களான சித் மற்றும் அசித் குறித்து அறியவில்லை என்றால், இவ்விதம் அறிவதற்கான வழியில்லை; இந்தக் காரணத்தினால், "மூன்று தத்வங்கள் குறித்து ஞானம் ஏற்படவேண்டும்", என்று கூறினார். மேலும் ச்வே. (1-12) - போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா - அனுபவிக்கும் சேதனன், அனுபவிக்கப்படும் வஸ்து, இதனை அனுபவிக்கும்படியாகச் செய்யும் ஸர்வேச்வரன் ஆகியவற்றை எண்ணியபடி -என்றும், ச்வே. (1-6) – ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா

ஜுஷ்டஸ் ததஸ் தேநாம்ருதத்வமேதி - ஜீவாத்மா மற்றும் பரமாத்மா ஆகிய இருவரும் வெவ்வேறு என்று தெளிந்து, அத்தகைய ஞானம் பெற்ற ஒருவனைக் குறித்து பரமாத்மா மகிழ்வதன் விளைவாக, அவனால் அன்புடன் ஏற்கப்படும் ஒருவன் மோக்ஷம் பெறுகிறான் - என்றும் உள்ள ச்ருதி வாக்கியங்களுடைய கருத்தும் இதுவே ஆகிறது. இவ்விதம் பொருள் கொள்ளவில்லையென்றால், "தமேவம் வித்வாந் - இவ்விதம் அறிந்த ஒருவன்" என்பதுடன் முரண்பாடு ஏற்படும். ஆகவே இந்த ச்ருதியின் நிழலிலேயே இவரும் அருளிச்செய்ததால், வேதாந்த விரோதம் ஏற்பட வாய்ப்பே இல்லை.

2. தத்வ த்ரயமாவது – சித்தும், அசித்தும், ஈச்வரனும்.

அவதாரிகை - தத்வத்ரயந்தான் ஏதென்னும் ஆகாங்க்ஷையிலே அருளிச் செய்கிறார் "தத்வ த்ரயமாவது சித்தும் அசித்தும ஈச்வரனும்" என்று.

விளக்கம் - "மூன்று தத்வங்கள் என்பவை எவை?", என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் - சித்தாவது சைதந்யாதாரமான வஸ்து. அசித்தாவது சைதந்ய அநாதாரமான வஸ்து. ஈச்வரனாகிறான் யோக வைசேஷிகாதி தந்தரத்திலுள்ளார் சொல்லுகிற கணக்கிலே ஒரு புருஷ விசேஷமன்றிகயே, வேதாந்திகள் சொல்லுகிற சிதசிந்தி யந்தா. "க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக:", "ப்ரதாந க்ஷேத்ரஜ்ஞ பதிர் குணேச:" என்னக் கடவதிறே.

விளக்கம் – சித் என்பது ஞானத்தை ஆதாரமாகக் கொண்ட வஸ்து, அசித் என்பது ஞானம் அற்ற வஸ்து ஆகும். ஈச்வரன் என்பவன் யோகசாரர் மற்றும் வைசேஷிகர்கள் கூறுவது போன்று ஒரு சாதாரண புருஷன் அல்லன்; வேதாந்திகள் கூறுவது போன்று சித் மற்றும் அசித் ஆகியவற்றை நியமிப்பவன் ஆகிறான். ச்வே. (1-10) - க்ஷரம் ப்ரதாநம் அம்ருத அக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவிசதே தேவ ஏக: - ப்ரதானம் என்பது க்ஷரம் (அழியக்கூடியது) எனப்படும். இதனைத் தனது இன்பத்திற்காக கொள்பவன் அக்ஷரம் (ஜீவாத்மா, அழிவற்றவன்) ஆவான். ஒரே

தேவன் இந்த இரண்டையும் நியமித்தபடி உள்ளான் – என்றும், ச்வே. (6-16) - ப்ரதாந க்ஷேத்ரஜ்ஞ பதிர் குணேச: - ப்ரதானத்திற்கும் க்ஷேத்ரஜ்ஞனுக்கும் (ஜீவாத்மா) அவனே தலைவன், அவனே குணங்களை நியமிப்பவன் ஆவான் – என்றும் கூறுவது காண்க.

3. சித்தென்கிறது - ஆத்மாவை.

அவதாரிகை – உத்தேச க்ரமத்திலே, தத்வத்ரயத்தினுடையவும் ஸ்வரூப ஸ்வபாவ விசேஷங்களை உபபாதிப்பதாகத் திருவுள்ளம் பற்றி, ப்ரதமம் சித் தத்வத்தை உபபாதிக்க உபக்ரமிக்கிறார், “சித்தென்கிறது ஆத்மாவை” என்று.

விளக்கம் - இவற்றைக் குறித்து வரிசையாக விளக்கும்விதமாக, இந்த மூன்று தத்வங்களுடைய இயல்பு மற்றும் தன்மைகளுடைய சிறப்புகளை வெளியிடத் திருவுள்ளம் கொண்டவர், அவற்றில் முதலில் சித் தத்வத்தை விளக்கும் பொருட்டுத் தொடங்குகிறார்.

வ்யாக்யானம் - நடுவில் திருவீதிப் பிள்ளை பட்டரும், ஆச்சான் பிள்ளையும் முதலான ஆசார்யர்கள தத்வத்ரயமருளிச் செய்கிறவிடத்தில், அசிதுபக்ரமமாக அருளிச் செய்தார்கள். இவர் சிதுபக்ரமமாக அருளிச்செய்தார். இதுக்குக் கருத்து, அசித் தத்வம் ஹேயதயா ஜ்ஞாதவ்யமாகையாலும், ஈச்வரன் உபாதேயதயா ஜ்ஞாதவ்யனாகையாலும், இப்படி இரண்டு தத்வத்தையும் அறிகைக்கு அதிகாரியான சேதநனுடைய ஸ்வரூபந் தன்னை முதலிலே அறிந்து கொள்ள வேணுமிறேயென்று. அவர்கள் தானப்படியருளிச் செய்வானென்? என்னில்; ஆத்மாவினுடைய ப்ரக்ருதே: பரத்வ ஜ்ஞாநம் ப்ரக்ருதியை அறியாதபோது கூடாமையாலே, முந்துற ப்ரக்ருதி தத்வத்தையறிந்து, அநந்தரம் தத்வ்யதிரிக்தனாய் ததந்தர்வர்த்தியான ஆத்மாவை அறிந்து, அநந்தரம் ஆத்மாவுக்கு அந்தர்யாமியாய் சரீரத்துகசு ஆத்மாவைப் போலே உபயத்துக்கும் அபிமாநியாயிருக்கிற பரமாத்மாவினுடைய ஸ்வரூபத்தை அறிகை புத்த்யாரோஹ க்ரமமாகையாலே அருளிச்செய்தார்கள்.

விளக்கம் - நடுவில் திருவீதிப் பிள்ளை பட்டர் மற்றும் ஆச்சான்பிள்ளை முதலான ஆசார்யர்கள், தத்வத்ரயம் குறித்த விளக்கம் அளித்தபோது, அசித் தத்வம் தொடக்கமாக அருளிச்செய்தார்கள். ஆனால் இவர் சித் தத்வம் தொடங்கி அருளிச்செய்கிறார். இதன் காரணம் என்ன? அசித் தத்வமாவது தாழ்ந்தது என்பதால் கைவிடத்தக்கது என்று அறியப்படுவதாலும், ஈச்வரனே கைக்கொள்ளத்தக்கவன் ஆவான் என்று அறியப்படுவதாலும், இவ்விதம் உள்ள இரண்டு தத்வங்களையும் அறிவதற்குத் தகுதி கொண்டவனாக உள்ள சேதநனுடைய ஸ்வரூபத்தை முதலில் அறியவேண்டும் அல்லவோ? அதனால் இவ்விதம் சித் தத்வத்தை முதலில் உரைத்தார். ஆனால் மற்ற சில ஆசார்யர்கள் அசித் தத்வத்தை ஏன் முதலில் அருளிச்செய்தார்கள்? ஆத்மவானது சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டது என்ற அறிவானது சரீரம் குறித்து அறியாமல் ஏற்படாது என்பதால், முதலில் சரீரம் குறித்து அறிந்து கொண்டு, அதன் பின்னர் அத்தகைய சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டவனாகவும் அந்தச் சரீரத்தில் உள்ளவனும் ஆகிய ஆத்மாவை அறிந்து கொண்டு, அதன் பின்னர் ஆத்மாவிற்கு அந்தர்யாமியாகவும், சரீரத்திற்கு ஆத்மாவைப் போன்று சித் மற்றும் அசித் ஆகிய இரண்டிற்கும் தேவதையாக உள்ள பரமாத்மாவின் ஸ்வரூபத்தை அறிதல் என்பது கீழிருந்து மேலே அறிவது போன்று உள்ளதால், இவ்விதமாக அசித்தை முதலில் அருளிச்செய்தனர்.

வ்யாக்யானம் - அசிதுபக்ரமமாகச் சொல்லுகிறவிது, “அந்நமயம்” தொடங்கி, “ஆநந்தமய”னளவும் ஆரோஹித்த ச்ருதி மர்யாதைக்குச் சேரும். சிதுபக்ரமமாகச் சொல்லுகிறவிது, “போக்தா போக்யம் ப்ரேரிதாரம்” இத்யாதி ச்ருதிக்குச் சேரும்; ஆகையால் இரண்டு க்ரமமும் வேதாந்த ஸித்தம். “சிதசிதீச்வர தத் ஸ்வபாவ” என்று ஆளவந்தாரும், “அசேஷ சிதசித வஸ்து சேஷிணே” எனறு பாஷ்யகாரருமருளிச் செய்த வசநங்கள் உபய கோடியிலும் சேரும். எங்ஙனேயென்னில்; சிதுபக்ரம யோஜநைக்குத் தானே ஸ்வரஸமாயிருந்ததிறே. அசிதுபக்ரம யோஜநையில் வந்தால் க்ரம விவக்ஷயா அன்று அவர்களப்படியருளிச் செய்தது; ஸமஸ்த பதமாக அருளிச்செய்கையாலே ஸமாஸத்தில் அப்யர்ஹிதமாதல், அல்பாச்தரமாதல் முற்படக் கடவதென்கிற ந்யாயத்தைப் பற்ற அல்பாச்தரமான சிச்சப்தம் முன்னாக

அருளிச்செய்தார்களித்தனை அப்யர்ஹிதனான ஈச்வரன்றன்னை முதலிலெடாதே, சிச்சப்தததாலே சேதநனைச் சொல்லிற்று "அல்பாச்தரம் பூர்வம்" என்கிற அநுசாஸந பலத்தாலே. இப்படி இரண்டு க்ரமமும் வேத வைதிக பரிக்ருஹீதமாகையாலே இரண்டும் முக்யமென்று கொள்ளக் குறையில்லை.

விளக்கம் - அசித் தொடக்கமாக உள்ள கருத்தானது "அந்நமயன்" என்று தொடங்கி, "ஆநந்தமயன்" என்று ச்ருதி முடிக்கின்ற வரிசையை ஏற்பது போன்றதாகும். சித் தொடக்கமாக உள்ள கருத்தானது, "போக்த போக்யம் ப்ரேரிதாரம்" என்று ச்ருதி கூறுவதை ஏற்பது போன்றதாகும். ஆகவே இந்த இரண்டு வரிசைகளுமே வேதாந்தந்தின்படி பொருத்தமே ஆகும். ஸ்தோத்ரரத்நத்தில் (4) - சித் அசித் ஈச்வர தத் ஸ்வபாவ - என்று ஸ்வாமி ஆளவந்தார் அருளிச்செய்த கருத்தும், வேதார்த்த ஸங்க்ரஹத்தில் - அசேஷ சித் அசித் வஸ்து சேஷிணே - என்று பாஷ்யகாரர் அருளிச் செய்த கருத்தும், இந்த இரண்டு வரிசைகளிலுமே சேரும். எப்படி? சித்தை முதலில் உரைத்தல் என்பது இயல்பாகவே பொருத்தமாக உள்ளது. அசித்தை முதலில் கூறியது என்பது வரிசையைக் கருத்தில் கொண்டு அல்ல; உம்மைத் தொகை கொண்டு பல சொற்களைச் சேர்க்க முற்படும்போது (உதாரணமாக "யானையும் குதிரையும்" என்பது காணலாம்), அவற்றில் சிறந்த பொருளை முதலில் கூறுதல் அல்லது குறைந்த எழுத்துக்கள் கொண்ட பொருளை முதலில் கூறுதல் என்னும் ந்யாயத்தின்படி, குறைந்த எழுத்துக்கள் கொண்டதான சித் என்பதை முதலில் கூறினர். இங்கு சிறந்த வஸ்துவாகிய ஈச்வரனை முதலில் உரைக்காமல், சித் என்ற சொல்லால் ஆத்மாவை முதலில் கூறியது ஏனென்றால், அல்பாச்தரம் பூர்வம் - குறைந்த எழுத்துக் கூட்டம் முதலில் வரும் - என்ற கட்டளையின் வலிமை காரணமாக ஆகும். இவ்விதம் இந்த இரண்டு வரிசைகளுமே வேதவைதிகர்களால் ஏற்படுவதால், இரண்டுமே முக்கியமானது என்று ஏற்பதில் தவறில்லை.

வ்யாக்யானம் - சிச்சப்தம், "ப்ரேக்ஷாபலப்திச் சித் ஸம்வித ப்ரதிபத் ஜ்ஞப்தி சேதநா" என்று, ஜ்ஞாநவாசி சப்தங்களோடே ஸஹபடிதமாகையாலும், ஜ்ஞாநாச்ரய வஸ்துவில் இதுக்கு ப்ரஸித்தி ப்ராசுர்யமில்லாமையாலும், "க்ஷர ஆத்மாநௌ ஈசதே தேவ ஏக:", "ய ஆத்மாநமந்தரோ யமயதி யமாத்மா ந வேத

யஸ்யாத்மா சரீரம்", "ஆத்மா ஜ்ஞாநமயோமல:" என்று, இப்படி ச்ருதி ஸ்ம்ருதிகளிலே பலவிடங்களிலும் சொல்லுகையாலே, ஆத்மசப்தத்துக்கு ஜீவவிஷயத்தில ப்ரஸித்தி ப்ராசுர்ய முண்டாகையாலும் "சித்தென்கிறது ஆத்மாவை" என்று ஸ்புடமாக அருளிச்செய்கிறார்.

விளக்கம் - சித் என்ற சொல்லானது, ப்ரேக்ஷோபலப்திச் சித் ஸம்வித ப்ரதிபத் ஜ்ஞப்தி சேதநா - ப்ரேக்ஷா, உபலப்தி , சித், ஸம்வித், ப்ரதிபத்தி, ஜ்ஞப்தி, சேதந ஆகிய சொற்கள் அனைத்தும் புத்தியைக் குறிக்கின்றன - என்பதற்கு ஏற்ப ஞானத்தைக் கூறும் சொற்களுடன் சேர்த்துப் படிக்கப்பட்டது; மேலும் ஞானத்திற்கு இருப்பிடமாக உள்ள வஸ்துவிற்கு ஞானத்தைக் காட்டிலும் சிறப்பு இல்லை; ச்வே. (1-10) – க்ஷர ஆத்மாநௌ ஈசதே தேவ ஏக: - அழியாமல் மரணம் அடையாமல் உள்ளது க்ஷரம் (ஜீவாத்மா), ஒருவனாகிய தேவனே அழியக்கூடிய ப்ரதாநத்தையும், ஆத்மாவையும் ஆள்கிறான் - என்னும், ய ஆத்மாநமந்தரோ யமயதி யமாத்மா ந வேத யஸ்யாத்மா சரீரம் – யார் ஆத்மாவின் உள்ளில் உள்ளானோ யார் இவ்விதம் உள்ளதை ஆத்மா அறியாதோ - என்றும், ஆத்மா ஜ்நாநம் யோ மல: - ஆத்மா ஞானமயமாகவும் தூய்மையாகவும் உள்ளவன் – என்றும் ச்ருதி ஸ்ம்ருதிகளில் பல இடங்களில் கூறப்பட்டது; ஆகவே, ஆத்மா என்ற சொல்லிற்கு ஜீவ விஷயத்தில் ப்ரஸித்தி உள்ளது; இந்தக் காரணங்களால் "சித் என்பது ஆத்மா" என்று தெளிவாக உரைக்கிறார்.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 273)

4-4-8 திருவுடைய மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்னும்
உருவுடை வண்ணங்கள் காணில் உலகளந்தானென்று துள்ளும்
கருவுடைத் தேவில்களெல்லாம் கடல்வண்ணன் கோயிலே யென்னும்
வெருவிலும் வீழ் விலு மோவாக் கண்ணன் கழல்கள் விரும்புமே

பொருள் - பரிபூர்ணமான ஐச்வர்யம் நிறைந்த அரசர்களைக் கண்டால், "அனைத்து விதத்திலும் பரிபூர்ணமாக உள்ளவனும், மஹாலக்ஷ்மியின் நாதனும் ஆகிய நாராயணனைக் கண்டேன்", என்கிறாள். மிகுந்த அழகு கொண்ட வடிவங்களைக் கண்டால், "உலகம் அனைத்தையும் அளந்து எடுத்துக் கொண்ட திருவிக்ரமனைக் கண்டேன்", என்கிறாள். சிறந்த ப்ரதிமங்கள் கொண்ட கோயில்களைக் கண்டால், "கடல் போன்ற வர்ணம் கொண்டவன் கோயில்களே ஆகும்", என்கிறாள். உறவினர்களைக் கண்டு அச்சம் கொள்ளும்போதும், மயக்கம் அடைந்த காலத்திலும், இடைவிடாமல் க்ருஷ்ணனுடைய திருவடிகளையே விரும்பி நிற்கிறாள்.

அவதாரிகை – "அத்யந்த துர்த்தசை வர்த்தியா நின்றாலும் இவள் ததேக பரையா யிருக்கும்" என்கிறாள்.

விளக்கம் – “மிகுந்த தகாத நிலையானது வளர்ந்தபடி இருந்தாலும், இவள் அவனுக்கு மட்டுமே வசப்பட்டவளாக உள்ளாள்”, என்கிறாள்.

வ்யாக்யானம் - (திருவுடை மன்னரைக் காணில்) குறைவற்ற ஐச்வர்யங்களையுடையரான ராஜாக்களைக் காணில், “ஸ்ரீய:பதியை ஒருபடி காணப் பெற்றேனே”யென்னும். நாதமுநிகள், ராஜா ஸாமந்தன் தலையிலே அடியையிட்டு ஆனைக்கழுத்திலே புக்க படியைக் கண்டு, “ஸர்வேச்வரன் ப்ரஹ்மாதிகள் தலையில் அடியிட்டுப் பெரிய திருவடியை மேற்கொள்ளும்படி இதுவாகாதே” என்னா மோஹித்தாரென்று ப்ரஸித்தமிறே; ராஜா ஸபரிகரமாக கங்கைகொண்டசோழபுரத்தேறப் போகச் செய்தே, பெரியமுதலியார் மன்னனார் திருவடிகளிலே ஸேவித்திருக்கச் செய்தே பெண்பிள்ளை வந்து, “நம் அகத்திலே ஒரு குரங்கும், இரண்டும் வில்லிகளும், ஒரு பெண்ணுமாக வந்து புகுந்தார்கள்” என்றவாறே, “பெருமாளும், இளையபெருமாளும், பிராட்டியும், ஐந்த்ர வ்யாகரண பண்டிதனும்” என்று புத்தி பண்ணிப் பின் தொடர்ந்து போய், முன்னே போய், “போகிறார்கள், போகிறார்கள்” என்னக் கேட்டுக் கீழைவாசலிலே சென்றவாறே, “இப்படி போகிறவர்களைக் கண்டிகோளோ?” என்று வாசலிலவர்களைக் கேட்க, அவர்கள் “கண்டிலோம்” என்ன, அதுவே ஹேதுவாகத் திருநாட்டுக்கு எழுந்தருளினாரிறே.

விளக்கம் - (திருவுடை மன்னரைக் காணில்) - சற்றும் குறையாத ஐச்வர்யங்கள் நிறைந்த அரசர்களைக் கண்டால், “மஹாலக்ஷ்மியின் நாயகனை நான் நன்றாகக் காணப் பெற்றேனே”, என்கிறாள். ஸாமந்தன் என்ற அரசன் தனது பட்டத்து யானையின் தலை மீது கால் வைத்து ஏறி அதன் முதுகில் அமர்ந்ததைக் கண்ட ஸ்வாமி நாதமுனிகள், “நான்முகன் முதலானோர் தலைகளில் திருவடிகள் வைத்து ஸர்வேச்வரன் கருடன் மீது அமர்கின்ற முறை இது போன்றோ?”, என்று எண்ணி மயங்கினார். ஒருமுறை அந்த அரசன் கங்கைகொண்டசோழபுரத்திற்கு வந்தபோது அவனைக் காண ஸ்வாமி நாதமுனிகள் அங்கு சென்றார். அப்போது அங்கு வந்த பெண்பிள்ளை, “நம்முடைய வீட்டிற்கு ஒரு குரங்கு, வில்லை உடைய இருவர் மற்றும் ஒரு பெண் வந்துள்ளனர்”, என்றாள். இதனைக் கேட்ட ஸ்வாமி நாதமுனிகள், “இராமன், லக்ஷ்மணன், சீதை மற்றும் இலக்கணத்தில் சிறந்த

அனுமன் வந்துவிட்டனர்", என்று எண்ணியவராக வீட்டிற்குச் சென்றார். ஆனால் அதற்கு முன்பாக அவர்கள் அங்கிருந்து சென்று விட, வழியில் உள்ளவர்கள், "போகிறார்கள், போகிறார்கள்" என்று கூறுவதைக் கேட்டு, கிழக்கு வாசலிற்குச் சென்று அங்குள்ளவர்களிடம், "இவ்வழியே சென்றவர்களைக் கண்டீர்களோ?," என்று கேட்டார். இதற்கு அவர்கள், "நாங்கள் காணவில்லை", என்று கூற, இதனையே காரணமாகக் கொண்டு நாதமுனிகள் திருநாட்டிற்கு எழுந்தருளினார்.

வ்யாக்யானம் - (உருவுடை வண்ணங்கள் காணில்) நீலம் குவளை காயா உருப்பெற எழுதின சித்ரம் இவற்றைக் காணில், நிறம் மாத்ரத்தையும் மாம்ஸ சக்ஷுஸ்ஸுக்கு விஷயமான ஸௌலப்யத்தையுங் கொண்டு, "குணாகுண நிரூபணம் பண்ணாதே, எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்தவனெ"ன்று, பசுவினருகே கட்டி வைத்த கன்று துள்ளுமா போலே, அஸம்ப்ரம வ்யாபாரத்தைப் பண்ணாநிற்கும். (கருவுடை இத்யாதி) கல் புதைத்துக் கிடக்கும் ஸ்தாநங்கள் காணில், "அவையெல்லாம் பெரியபெருமாள் பள்ளி கொண்டருளுகிற கோயிலே" என்னும். இவற்றுக்கு உள்ளீடு ஸர்வேச்வரனாகையாலே, இவற்றை "கரு" என்கிறார். "திசைமுகன் கருவுள் வீற்றிருந்து படைத்திட்ட கருமங்களும்" என்கிறபடியே. கருவென்று கர்ப்பத்துக்கும், கர்ப்பாதாரத்துக்கும் பேர். ப்ரதிமையை யுடைத்தான, தேவில்கள் - தேவாலயங்களெல்லாம் கண்டால். (வெருவிலும் இத்யாதி) தெளிவுடையளாய் பந்துக்களைக் கண்டு அஞ்சியிருக்கும் போதோடு அறிவழிந்து மோஹித்த ஸமயத்தோடு வாசியற, இடைவிடாதே கிருஷ்ணன் திருவடிகள் விரும்பா நிற்கும். இது என்று ஏகரூபமாயிருக்கும். மாறாடி வருவது மோஹமும் உணர்த்தியும்; ஸ்தாயியாயிருப்பது இதுவே. இத்தால், பகவத் ப்ராவண்யம் இவர்க்கு ஸத்தா ப்ரயுக்தமென்கை.

விளக்கம் - (உருவுடை வண்ணங்கள் காணில்) - நீலமணி, கருநெய்தல், காயாமலர் ஆகியவை போன்ற தோற்றம் கொண்ட ஓவியங்களைக் கண்டால், அவற்றின் நிறம் மற்றும் சாதாரணக் கண்கள் கொண்டு காணும்படியாக உள்ள எளிமையான தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டவளாக, "குணம் உள்ளவரா அல்லது குணம் அற்றவரா என்று ஆராயாமல் அனைவருடைய தலையிலும் தனது திருவடிகளை வைத்தவன்" என்று எண்ணுகிறாள். இவ்விதம் உரைத்து, பசுவின்

அருகில் கட்டி வைக்கப்பட்ட கன்றுக்குட்டி துள்ளுவது போன்று மிகுந்த பரபப்பாகத் தனது செயல்களைச் செய்கிறாள். (கருவுடைய இத்யாதி) - மற்ற தெய்வங்கள் உள்ள கோயில்களைக் காணும்போதிலும், "பெரிய பெருமாள் திருப்பள்ளி கொண்டருளும் கோயில்", என்கிறாள். ஆனால் மற்ற தெய்வங்களை "கரு" என்று கூறலாமோ என்றால், அவற்றின் உள்ளிலும் ஸர்வேச்வரனே உள்ளான் என்பதால் இவ்விதம் உரைக்கிறாள். திருவாய்மொழி (5-10-8) - திசைமுகன் கருவுள் வீற்றிருந்து படைத்திட்ட கருமங்களும் - என்பது காண்க. (வெருவிலும் இத்யாதி) - தெளிவுள்ளவளாக உறவினைரக் காணும்போது அச்சத்துடன் உள்ளாள்; அறிவற்றபோது மயங்கி நிற்கிறாள்; இந்த இரண்டு நிலைகளுக்கும் எந்தவிதமான வேறுபாடும் இன்றி, இடைவிடாமல் க்ருஷ்ணனுடைய திருவடிகளையே எண்ணியபடி உள்ளாள். இந்த நிலையானது எப்போது ஒரே போன்று காணப்படும். மயக்கமும் தெளிவும், மாறி மாறி வருவதாகும்; ஆனால் நிலையாக உள்ளது இந்த நிலையே ஆகும். இந்தக் காரணத்தால்தான், பகவானிடம் ஈடுபாட்டு நிற்கும் நிலை என்பதே, இவர் தன்னுடைய உயிருடன் உள்ளதற்கான அடிப்படை ஆகிறது.

4-4-9 விரும்பிப் பகவரைக் காணில் வியலிடமுண்டானே யென்னும்
கரும் பெருமேகங்கள் காணில் கண்ணனென்றேறப் பறக்கும்
பெரும்புல வாநிரை காணில் பிரானுளனென்னு பின் செல்லும்
அரும்பெறல் பெண்ணினை மாயோன் அலற்றிய யர்ப்பிக்கின்றானே

பொருள் - பகவத் ரூபமாகவே உள்ளவர்களும் பகவானுக்கு அடிமைப்பட்டவர்களும் ஆகிய ஸந்யாஸிகளைக் கண்டால், "விசாலமான இந்த ஜகத் முழுவதயும், அதன் மேல் உள்ள விருப்பம் காரணமாக வயிற்றில் வைத்துப் பாதுகாத்தவனே", என்கிறாள். கருமையான மேகங்களைக் கண்டால், "அனைவருக்கும் தனது வடிவத்தைக் காண்பித்து நிற்கும் கிருஷ்ணன்", என உரைத்து மேலே ஏறிப் பறக்க முயல்கிறாள். மிகுந்த வளர்த்தியுடனும் காண்பதற்கு இனிமையாகவும் உள்ள பசுக்கூட்டங்களைக் கண்டால், "இவற்றை நன்றாக மேய்த்துக் காப்பாற்றுகின்ற க்ருஷ்ணனும் உடன் வருகிறான்", என்று உரைத்து,

அவற்றின் பின்னே செல்கிறாள். பெறுவதற்கு மிகவும் அரியதான எனது இந்தப் பெண்ணை, வாய் விட்டு அவற்றும்படியாக செய்து மயங்கும்படி ஆக்குகிறான்.

அவதாரிகை - பெறுதற்கரிய இவள், தன்னையே வாய் வெருவி மோஹிக்கும்படி பண்ணா நின்றான்" என்கிறாள்.

விளக்கம் - "பெறுவதற்கு அரியவளாக உள்ள இந்தப் பெண்ணை, தனது வாய் விட்டு அலற்றி மயங்கும்படியாகச் செய்கிறான்", என்கிறாள்.

வ்யாக்யானம் - (பகவரைக் காணில்) ஜ்ஞாநாதி குணங்களால் பூர்ணராய், இதர விஷயங்களில் விரக்தராயிருக்கும் ஸந்யாஸிகளைக் காணில் ஆதரித்து, ப்ரளயாபத்திலே ஜகத்தையடைய வயிற்றிலே வைத்து நோக்கி, ரக்ஷ்ய வர்க்கத்தினுடைய ரக்ஷணத்தைப் பண்ணுகையாலே வந்த நைரபேக்ஷ்யம் தோற்ற இருக்கிற ஸர்வேச்வரனென்னும். வியலிடம் – விஸ்மயநீயமான பூமி. "நின்ற குன்றத்தினை நோக்கி நெடுமாலே" என்று ப்ரமித்தவோ பாதி காணும் சேஷபூதரை சேஷியாகக் கொண்டு ப்ரமிக்கிற இதுவும். (கரும் பெருமேகம் இத்யாதி) கறுத்துப் பெருத்து ச்ரமஹரமான மேகத்தைக் கண்டவாறே, அவ்வடிவையுடைய க்ருஷ்ணனென்று பறப்பாரைப் போலேயிருக்க ஸம்ப்ரமியா நிற்கும். மேக தர்சநத்தில் சிறகெழும் போலே காணும். மேகத்தைக் கண்டவாறே ஒரு பக்ஷபாதமுண்டகக் கடவதிறே. ராஜேந்த்ரசோழனிலே திருவாய்க்குலத்தாழ்வா ரென்றோருத்தருண்டு; அவர் வர்ஷாவிலே "பயிர் பார்க்க" என்று புறப்பட்டு மேக தர்சநத்திலே மோஹித்து விழுந்தார்; இவர் விழுந்ததைக் கண்டு நின்ற குடிமகன் ஓடி வந்து அவரையெடுத்துக் கொண்டு வந்து க்ருஹத்திலே விட்டு, "இவர் ப்ரக்ருதியறிந்திருந்தும் இந்நாளிலே இவரை வயல் பார்க்கப் புறப்பட விடுவோருண்டோ?" என்றான்.

விளக்கம் - (பகவரைக் காணில்) - ஞானம் முதலான குணங்களைப் பரிபூர்ணமாகக் கொண்டவராகவும், மற்ற விஷயங்களில் விரக்தி கொண்டவராகவும் உள்ள ஸந்யாஸிகளை இந்த பெண் காண நேர்ந்தால், "ப்ரளய ஆபத்து ஏற்பட்டபோது, இந்த ஜகத்தைத் தனது திருவயிற்றில் பாதுகாப்பாக வைத்து நோக்கி, தன்னால்

காப்பாற்றப்பட வேண்டியவற்றைக் காப்பாற்றி, அதன் விளைவாக மனநிறைவுடன் நிற்கும் ஸர்வேச்வரனே இவர்கள்", என்கிறாள். "வியல் இடம்" என்றால் பரந்து விரிந்துள்ள பூமி. அங்கு காணப்படும் ஓர் மலையை நோக்கி திருவாய்மொழி (4-4-4) - நின்ற குன்றத்தினை நோக்கி நெடுமாலே - என்று அழைத்தது போன்று, அவனுக்கு அடிமையாக உள்ளவர்களை, அவனாகவே காண்கிறாள். (கரும் பெருமேகம் இத்யாதி) - கறுத்தும், பொருத்தும், காண்பதற்கு இனிமையாகவும் உள்ள மேகத்தைக் கண்டால், "அப்படிப்பட்ட வடிவு கொண்ட க்ருஷ்ணன்", என்று உரைத்து, பறப்பவர்கள் போன்று பரபரப்புடன் உள்ளாள். மேகத்தைக் கண்டவுடன் சிறகு உண்டாவது போன்று உள்ளாள். மேகத்தைக் கண்டவுடன் இந்த நிலை ஏற்படுகிறது. ஆனால் இவ்விதம் நடக்குமோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். இராஜேந்திரசோழன் என்னும் ஓர் ஊரில் திருவாய்க்குலத்தாழ்வார் என்ற ஒருவர் இருந்தார். அவர், மழை பெய்யும் காலத்தில், தனது வயல்களில் உள்ள பயிர்களைக் காணச்சென்றார். அப்போது மழை மேகத்தை கண்டவுடன் மயங்கி விழுந்தார். இவ்விதம் இவர் விழுந்ததைக் கண்ட ஒருவர் ஓடி வந்து, அவரைத் தூக்கிக் கொண்டு சென்று, அவரது வீட்டில் விட்டு, "இவருடைய தன்மையை நன்றாக அறிந்துள்ளபோதிலும், மழைக்காலத்தில் இவரை வயல்வெளிக்குச் செல்ல யாரேனும் விடுவார்களோ?", என்றார்.

வ்யாக்யானம் - (பெரும் புலம் இத்யாதி) அளவுபட்டிருக்கையன்றிக்கே பெருத்து தர்சநீயமாயிருக்கிற பசு நிரைகளைக் காணில், என் தசையறிந்து வந்து உதவுகைக்காகக் கடைக்கூழையிலே வாரா நின்றானென்று, அவற்றுக்குப் பின்பு ஏறப் போகாநிற்கும். அன்றிக்கே, அவற்றின் திரளுக்குள்ளே அவனையும் காணலாமென்று அவற்றின் பின்னே போகா நிற்குமென்றுமாம். (அரும்பெறல் பெண்ணினை) "மஹதா தபஸா ராம" என்று தம்மைப் பெற்றவர்கள் பட்ட வருத்தமல்லகிடீர் நான் இவளைப் பெற்றப்பட்டது; அடியிலே நெடுங்காலமும் தபஸ்ஸு பண்ணியிறே இவளைப் பெற்றது இவள். (மாயோன்) "குரவ: கிங்கரிஷ்யந்தி" என்று பெற்றவர்களைக் கைவிடும்படி பண்ண வல்லவன். (அலற்றி அயர்ப்பிக்கின்றான்) எப்போதும் தன்னையே வாய் வெருவும்படி பண்ணி அவ்வளவிலுமன்றிக்கே மோஹிக்கும்படி பண்ணா நின்றான்.

விளக்கம் - (பெரும் புலம் இத்யாதி) - அளவுடன் கூடியது என்று அல்லாமல், அளவற்று பெருத்து, காண்பதற்கு இனிமையாக உள்ள பசுக்கூட்டங்களைக் காணும்போது, “எனது நிலைமை அறிந்து உதவுவதற்காக இந்தக் கூட்டத்தின் பின்னே வருகிறான்”, என்று அவற்றின் பின்னே செல்கிறாள்; அல்லது அந்தக் கூட்டத்தின் நடுவில் அவனைக் காணலாம் என்று எண்ணியவளாக, அவற்றின் பின்னே செல்கிறாள் என்றும் கூறலாம். (அரும்பெறல் பெண்ணினை) - இராமாயணம் ஆரண்யகாண்டம் (66-3) – மஹதா தபஸா ராம - மஹத்தான தவம் மற்றும் யாகத்தால் வந்த இராமன் – என்று கூறுவதற்கு ஏற்ப, அவர்கள் அடைந்த கஷ்டத்தைக் காட்டிலும் இவளைப் பெறுவதற்கு நான் அதிகமான கஷ்டம் அடைந்தவள் ஆவேன்; நீண்டகாலம் இவளைப் பெறுவதற்காக இவள் தவம் செய்தவள் ஆவாள். (மாயோன்) – ஸ்ரீவிபு (5-6-27) - குரவ: கிங்கரிஷ்யந்தி - கோபிகைகள், “தாய்தந்தையர் நம்மை என்ன செய்வர்” - என்று கூறும்படியாக, பெற்றவர்களையும் உதறும்படியாகக் செய்யவல்லவன் ஆவான். (அலற்றி அயர்ப்பிக்கின்றான்) - எப்போதும் தன்னைக் குறித்தே இவளுடைய வாயானது புலம்பும்படியாகச் செய்து, அது மட்டும் அல்லாமல் மயங்கி விழும்படியாகவும் செய்கிறான்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

சது: ச்லோகீ

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த

வ்யாக்யானம்

மூலமும், எளிய தமிழ்நடையும்

(பகுதி – 19)

2. யஸ்யாஸ்தே மஹிமாநம் ஆத்மந இவ த்வத் வல்லபே: அபி ப்ரபு:
ந அலம் மாதும் இயத்தயா நிரவதிம் நித்ய அநுகூலம் ஸ்வத:
தாம் த்வாம் தாஸ இதி ப்ரபந்ந இதி ச ஸ்தோஷ்யாமி அஹம் நிர்பயோ
லோக ஏக ஈச்வரி லோகநாத தயிதே தாந்தே தயாந்தே விதந்

பொருள் - அனைத்து லோகங்களுக்கும் ஒரே ஈச்வரியாக உள்ளவளே! கருணைக் கடலே! உன்னுடைய அளவற்றதும், இயல்பாகவே ஸர்வேச்வரனுக்கு ஏற்புடையதும் ஆகிய உனது பெருமையை, ஸர்வேச்வரனாகிய உனது நாயகன், தனது பெருமையைப் போன்றே, "இது இந்த அளவு" என்று அறியமாட்டான். அப்படிப்பட்ட உன்னை, "உனக்கு நான் தாசன், உன்னை நான் சரணம் அடைந்தவன்" என்றுள்ள நான், சிறிதும் பயம் இல்லாதவனாகத் துதிக்கிறேன்.

வ்யாக்யானம் - (யஸ்ய) – ஸ்ரீவிபு. (1-9-53) - யஸ்ய ஆயுதாயுதாம் ச அம்சே விச்வசக்தி: இயம் ஸ்திதா - யார் ஒருவனுடைய பல ஆயிரத்தில் ஒரு பாகமாக உள்ள ஒரு பகுதியில் உலகம் என்ற சக்தி நிலைக்கிறதோ – என்றும், ஸ்ரீவிபு. (6-5-84) - ஸ்வசக்திலேசாத் த்ருத பூதஸர்க்க: - தனது சக்தியின் ஒரு சிறிய பகுதி மூலம் மட்டுமே தாங்கப்பட்ட உயிர்களைக் கொண்டவன் – என்றும், ஸ்ரீவிபு. (5-22-15) – மநஸைவ ஜகத் ஸ்ருஷ்டிம் ஸம்ஹாரம் ச கரோதி ய: - யார் ஒருவன் தனது மனம்

மூலம் மட்டுமே இந்த ஜகத்தின் ஸ்ருஷ்டி மற்றும் ஸம்ஹாரத்தைச் செய்கிறானோ - என்றும், ச்வே. (6-8) - பராஸ்ய சக்தி: விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பலக்ரியா ச – அவனுடைய சக்தியானது பலவிதமாகவும், ஞானம் பலம் மற்றும் செய்கைகளைக் இயல்பாகவே கொண்டதாகவும் உள்ளது - என்றும், மஹாநாராயண உபநிஷத் - ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் – தொடக்கத்தில் நாராயணன் மட்டுமே இருந்தான் என்றும், ஸுபால உபநிஷத் (7) - திவ்யோ தேவ ஏகோ நாராயண: - திவ்யமானவனும், தேவனும் நாராயணன் ஒருவனே - என்றும் உள்ள ப்ரமாணங்களால் வெளிப்படுத்தப்பட்ட பரத்வத்தை உடையவன், உனக்குக் கணவனாக உள்ளான்; இப்படிப்பட்ட ஸர்வேச்வரனுக்குக் கூட எட்டாதவிதமாக, "இத்தகையது" என்று வாக்காலும் மனதாலும் கூற இயலாதபடியாக உனது அளவற்ற பெருமையானது உள்ளது; இவ்வளவு என்று நிரூபிக்க இயலாதபடி உள்ளது. ஆனால் அவன் உனது பெருமையை "இவ்வளவு" என்று நிருபிக்க முயன்றால், திருவாய் (8-4-6) - தனக்கும் தன் தன்மை அறிவரியான் – என்பதற்கு ஏற்ப தன்னுடைய வைபவத்தைக் கூடத் தான் உணர இயலாமல் உள்ளது போன்று, உனது பெருமையை உணர்வதில் சக்தி அற்றவனாகவே உள்ளான்.

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்